# <u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.</u>

## <u>MCOP.No. 14/2020</u>

2023-ம் ஆண்டு ஜூன் மாதம் 19-ம் நாள் திங்கட்கிழமை **எ.ம.சா.1**-ன் வாக்கு மூலம் (1969-ம் ஆண்டு 54-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) மொழிப்பெயர்ப்பாளர் திரு.எஸ்.சுரேஸ்குமார் என்பவரால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | ஜோதிமணி | **வட்டம்** | திருமங்கலம் |
| **த.பெ** | ராமமூர்த்தி | **சமயம்** | இந்து |
| **கிராமம்** | திருமங்கலம் | **வயது** | 28/2023 |

**<u>மனுதரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் 4ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் மேற்படி பணியில் ஜனவரி 2022ல் சேர்ந்தேன். அதனால் மேற்படி வழக்கு குறித்து நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரர் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் கம்பெனி லிமிடெட் 4வது எதிர்மனுதாரர் ஸ்ரீராம் இன்சூரன்ஸ் கம்பெனி ஆகிய இரு நிறுவனங்களும் சகோதர நிறுவனங்கள் என்றால் சரிதான். இரண்டு நிறுவனங்களுக்கும் ஒரே அலுவலகம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி இரண்டு நிறுவனங்களுக்கும் ஒரே அலுவலகம் தான் என்றும் இரண்டு தரப்பினருக்கும் சட்ட அறிவிப்பு அனுப்பிய ஏடி கார்டு ஒரே முகவரிக்கு தான் அனுப்பப்பட்டுள்ளது என்றும் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக இன்சூரன்ஸ் யார் பண்ணுவார்கள் என்றால் யார் வேண்டுமென்றாலும் பண்ணுவார்கள். பைனான்ஸ் கம்பெனி பைனான்ஸ் கொடுப்பதினால் அவர்கள் தான் இன்சூரன்ஸ் செய்வார்கள் என்று சொன்னால் அந்த மாதிரியும் பண்ணலாம். இன்சூரன்ஸ் ரினிவல் செய்வதும் புக் பைனான்சில் இருக்கும் வரை அவர்கள் தான் பராமரிப்பும் பண்ணுவார்கள் என்று சொன்னால் சரியல்ல. டிஎன் 63 எஸ் 7016 டாடா ஏசி வாகனத்தை எங்கள் சகோதர நிறுவனமான ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் நிறுவனம் தான் பைனான்ஸ் செய்தார்கள் என்றால் சரியல்ல. பைனான்ஸ் அவர்கள் தான் செய்தார்கள் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து ஏற்பட்டவுடன் 3ம் எதிர்மனுதாரர் 4வது எதிர்மனுதாரருக்கு ஆதரவாக ரினிவல் ஆவணத்தை மறைத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரும் 4ம் எதிர்மனுதாரரும் உள்கூட்டாக இருந்துக் கொண்டு மனுதாரர்களுக்கு நஷ்டஈடு கிடைக்கக் கூடாதென பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 3ம் மனுதாரர் பிரசாந்த் என்பவருக்கு திடீர் திடீரென்று தோன்றி மறையும் மனக்கோளாறு இருப்பதால்

அவருக்கு காப்பாளர் யாரும் போட்டு வழக்கு நடத்த வேண்டி தேவையில்லை என்றால் காப்பாளர் வைத்து தான் வழக்கை நடத்த வேண்டும். 3ம் மனுதாரர் வக்காலத்தில் அவர் தான் கையெழுத்து செய்துள்ளார் என்றும் யாரும் மோசடி செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி விபத்தை ஏற்படுத்திய டாடா ஏசி வாகனத்தின் ஆர்சி புக், வாகனம் தொடர்பான அனைத்து ஆவணங்களும் 3ம் எதிர்மனுதாரர் வசம் தான் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் ஒரே நிறுவனம் என்பதால் உண்மையை மறைத்து 3ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு ஆதரவாக செயல்படுகிறார் என்றும் நானும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நஷ்ட ஈடு நாங்கள் தான் கொடுக்க சட்டப்படி கடமைப்பட்டவர்கள் என்று சொன்னால் விபத்து நடந்த சமயத்தில் பாலிசி நிலுவையில் இல்லாததால் நஷ்ட ஈடு கொடுக்க எங்கள் நிறுவனம் கடமைப்பட்டவர்கள் அல்ல.